கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண். 24/2016

அ.சா. **1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆறுமுகம் | சாதி | |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுக்கா | | வயது | |
| மாவட்டம் | | தேதி | 27.08.2021 |

(27.08.2021) இன்று 1963ம் ஆண்டு சட்டம் 44ன் படி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் அரியலூர் திருக்கையில் குடியிருந்து வருகிறேன். நான் தீபம் ஓட்டல் என்ற பெயரில் ஓட்டல் நடத்தி வருகிறேன். கடந்த 12.04.2011 அன்று இரவு 10.30 மணியளவில் நான் ஓட்டலின் பின்புறம் பாத்திரங்களை கழுவி கொண்டியிருக்கும் போது எனது ஓட்டலின் பின்புறம் உள்ள ஆன்நத நகரில் இருந்து அலரல் சத்தம் கேட்டது. நான் பாத்திரம் கழுவும் போது உடன் இருந்தவர்கள் உமாநாத், சிவா, மணிகண்டன் மற்றும் சிலருடன் சத்தம் கேட்ட இடத்திற்கு சென்றோம். அங்கு இருட்டாக இருந்ததால் டார்ச் லைட் எடுத்துக்கொண்டு போனேன். அங்கு ஒரு நபர் மயங்கி கீழே கிடந்தார். அவருக்கு தலையில் ரத்தம் காயம் இருந்தது. அங்கிருந்து 2 நபர்கள் ஓடுகின்ற சத்தம் கேட்டது. ஓடுகின்ற நபர்களை நாங்கள் விரட்டி பிடித்தோம். அவர்களை பிடித்து விசாரித்த போது அவர்கள் இருவரும் அய்யப்பன் என்று சொன்னார்கள். அவர்கள் தான் ஆஜர் எதிரிகள். அந்த இடத்தில் தடியும், கல்லும் இருந்தது. அவர்கள் திருவண்ணாமலை மாவட்டம், செங்கத்தை சேர்ந்தவர்கள் என்று சொன்னார்கள். மேலும், அவர்கள் அன்பு என்ற ஒருவர் இருந்ததாகவும், அவர் ஓடிவிட்டதாகவும் சொன்னார்கள். இறந்தவர் பெயரை விசாரிக்க சரவணன் என்றும், அவர் கூட்டேரிப்பட்டு என்றும் தெரியவந்ததது. சரவணன் இறந்துகிடந்த இடத்தில் சில பேரை வைத்து விட்டு நாங்கள் பிடிபட்ட இருவர்களை கெடார் காவல் நிலையத்தில் கொண்டு வந்து ஆஜர்படுத்தினோம். இது சம்மந்தமாக புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. அதன் பிறகு என்னை வானூர் நீதிமன்றத்தில் நீதிபதி அவர்கள் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார். என்னிடம் காட்டப்படுவது தான் நான் வானூர் நீதிபதி அவர்கள் முன்னிலையில்

கொடுத்த வாக்குமூலம்.    அது அ.சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.  இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

இல்லை.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண். 24/2016

அ.சா. **2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | உமாநாத் | சாதி | |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுக்கா | | வயது | |
| மாவட்டம் | | தேதி | 27.08.2021 |

(27.08.2021) இன்று 1963 ம் ஆண்டு சட்டம் 44 ன் படி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் அரியலூர் திருக்கையில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுனராக வேலை பார்த்து வருகிறேன். நான் அ.சா.1 ஆறுமுகத்திடம் டாட்டா ஏசி வண்டி ஓட்டியிருந்தேன். கடந்த 12.04.2011 அன்று இரவு 10.30 மணியளவில் நான் நானும், அ.சா.1 ம் ஓட்டலின் பின்புறம் பாத்திரங்களை கழுவி கொண்டியிருந்தோம். அப்போது எங்களுடன் ஆறுமுகம், சிவா ஆகியோர்கள் இருந்தார்கள். அப்போது ஓட்டலின் பின்புறம் உள்ள ஆன்நத நகரில் இருந்து அய்யோ, அம்மா காப்பாத்துங்கள் என்று அலரல் சத்தம் கேட்டது. நாங்கள் ஓடிப்போய் பார்த்தோம். அங்கு ஒரு நபர் மயங்கி கீழே கிடந்தார். அவருக்கு தலையில் பலத்த ரத்த காயம் இருந்தது. அங்கிருந்து 2 நபர்கள் கிழக்கு பக்கம் ஓடினார்கள். நானும், சிவாவும், மணிகண்டன், குபேந்திரன், பிரகாஷ் ஆகியோர்கள் அவர்களை பிடிக்க ஓடினோம். 2 நபர்களை பிடித்துவிட்டோம். அவர்களை பார்த்தால் அடையாளம் சொல்லமுடியும். ஆஜர் எதிரிகள் தான் அவர்கள். அவர்கள் பெயர்களை விசாரிக்க 2 பேரும் அவர்களது பெயர் அய்யப்பன் என்று தான் சொன்னார்கள். ஓடிபோன மற்றொரு நபரின் பெயர் அன்பு என்று தெரிந்துகொண்டோம். இறந்தவர் பெயரை விசாரிக்க சரவணன் என்றும், அவர் கூட்டேரிப்பட்டு என்றும் தெரியவந்தததது. சரவணன் இறந்துகிடந்த இடத்தில் பெரிய கல்லும், சற்று தள்ளி கட்டை ஒன்று இருந்தது. அங்கு சில பேரை வைத்து விட்டு நாங்கள் பிடிபட்ட இருவர்களை கெடார் காவல் நிலையத்தில் கொண்டு வந்து ஆஜர்படுத்தினோம். இது சம்மந்தமாக அ.சா.1 புகார் கொடுத்தார். அதன் பிறகு என்னை வானூர் நீதிமன்றத்தில் நீதிபதி அவர்கள் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார். என்னிடம் காட்டப்படுவது தான் நான் வானூர் நீதிபதி அவர்கள் முன்னிலையில் கொடுத்த வாக்குமூலம். அது அ.சா.ஆ.3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. இந்த வழக்கு

சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

இல்லை.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

<u>அமர்வு வழக்கு எண்.</u> 24/2016

**<u>அ.சா. 3</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சண்முகம் | சாதி | |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுக்கா | | வயது | |
| மாவட்டம் | | தேதி | 27.08.2021 |

(27.08.2021) இன்று 1963ம் ஆண்டு சட்டம் 44ன் படி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது நடுக்குப்பம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சேமியா அப்பளம் வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2யை தெரியும். அ.சா.1 ஓட்டல் வைத்துள்ளார். சம்பவத்தில் இறந்துபோன சரவணன் என் மகன். கடந்த 13.04.2011ம் தேதி என் மகன் சரவணன் அரியலூர் திருக்கை கிராமத்தில் கொலை செய்யப்பட்டுவிட்டதாக தகவல் கிடைத்து முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தேன். என் மகன் வீட்டில் இருந்த போது அன்பு வந்து அழைத்து சென்று அய்யப்பன் என்பவருடன் சேர்ந்து அடித்து கொன்றுவிட்டதாக கேள்விப்பட்டேன். இந்த வழக்கு சம்மந்தமாக ஆறுமுகம் என்பவர் புகார் கொடுத்ததாக தெரிந்துகொண்டேன். பிறகு என்னை வானூர் நீதிமன்றத்தில் நீதிபதி அவர்கள் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார். என்னிடம் காட்டப்படுவது தான் நான் வானூர் நீதிபதி அவர்கள் முன்னிலையில் கொடுத்த வாக்குமூலம். அது அ.சா.ஆ.4 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

இல்லை.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

<u>அமர்வு வழக்கு எண்.</u> 24/2016

<u>அ.சா.</u> **4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாஞ்சாலி | சாதி | |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுக்கா | | வயது | |
| மாவட்டம் | | தேதி | 27.08.2021 |

(27.08.2021) இன்று 1963ம் ஆண்டு சட்டம் 44ன் படி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது நடுக்குப்பம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சேமியா அப்பளம் வியாபாரம் செய்து வருகிறேன். சம்பவத்தில் இறந்துபோன சரவணன் என் மகன். கடந்த 13.04.2011ம் தேதி என் மகன் சரவணன் அரியலூர் திருக்கை கிராமத்தில் கொலை செய்யப்பட்டுவிட்டதாக தகவல் கிடைத்து முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தேன். என் மகன் வீட்டில் இருந்த போது அன்பு வந்து அழைத்து சென்று அய்யப்பன் என்பவருடன் சேர்ந்து அடித்து கொன்றுவிட்டதாக கேள்விப்பட்டேன். இந்த வழக்கு சம்மந்தமாக ஆறுமுகம் என்பவர் புகார் கொடுத்ததாக தெரிந்துகொண்டேன். பிறகு என்னை வானூர் நீதிமன்றத்தில் நீதிபதி அவர்கள் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார். என்னிடம் காட்டப்படுவது தான் நான் வானூர் நீதிபதி அவர்கள் முன்னிலையில் கொடுத்த வாக்குமூலம். அது அ.சா.ஆ.5 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

இல்லை.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

<u>அமர்வு வழக்கு எண்.</u> 24/2016

<u>அ.சா. **5**</u>

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரகாஷ் | சாதி | |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுக்கா | | வயது | |
| மாவட்டம் | | தேதி | 27.08.2021 |

(27.08.2021) இன்று 1963ம் ஆண்டு சட்டம் 44ன் படி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் அரியலூர் திருக்கையில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் காவலராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவம் நடந்த சமயத்தில் ஓட்டுனராக வேலை பார்த்து வந்தேன். அ.சா.1, 2 யை தெரியும். அவர்கள் ஓட்டல் வைத்திருந்தார்கள். கடந்த 12.04.2011 அன்று இரவு 10.30 மணியளவில் அ.சா.1, அ.சா.2ம் ஓட்டலின் பின்புறம் பாத்திரங்களை கழுவி கொண்டியிருந்த போது நான், சிவா, உமாநாத், குபேந்திரன், ஆகியோர்கள் இருந்தார்கள். அப்போது ஓட்டலின் பின்புறம் உள்ள ஆன்நத நகரில் இருந்து அய்யோ, அம்மா என்னை கொல்ராங்களே காப்பாத்துங்கள் என்று அலரல் சத்தம் கேட்டது. நாங்கள் ஓடிப்போய் பார்த்தோம். அங்கு ஒரு நபர் மயங்கி கீழே கிடந்தார். அவருக்கு வலதுபுற தலையில் பலத்த ரத்த காயம் இருந்தது. அங்கிருந்து 2 நபர்கள் கிழக்கு பக்கம் ஓடினார்கள். மேற்கு பக்கம் ஒருவர் ஓடினார். நானும், சிவாவும், மணிகண்டன், குபேந்திரன், உமாநாத் ஆகியோர்கள் கிழக்கு பக்கமாக ஓடியவர்களை பிடிக்க ஓடினோம். 2 நபர்களை பிடித்துவிட்டோம். அவர்களை பார்த்தால் அடையாளம் சொல்லமுடியும். ஆஜர் எதிரிகள் தான் அவர்கள். அவர்களை விசாரிக்க 2 பேரும் அவர்களது பெயர் அய்யப்பன் என்று தான் சொன்னார்கள். ஓடிபோன மற்றொரு நபரின் பெயர் அன்பு என்று தெரிந்துகொண்டோம். இறந்தவர் பெயரை விசாரிக்க சரவணன் என்றும், அவர் கூட்டேரிப்பட்டு என்றும் தெரியவந்தது. சரவணன் இறந்துகிடந்த இடத்தில் பெரிய கல்லும், சற்று தள்ளி கட்டை ஒன்று, மதுபாட்டில்கள், சாப்பிட்ட இலைகள் இருந்தது. அங்கு சில பேரை வைத்து விட்டு நாங்கள் பிடிபட்ட இருவர்களை கெடார் காவல் நிலையத்தில் கொண்டு வந்து ஆஜர்படுத்தினோம். இது சம்மந்தமாக ஆறுமுகம் புகார் கொடுத்தார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

இல்லை.

மறு விசாரணை

இல்லை.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண். 24/2016

அ.சா. **6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | சாதி | |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுக்கா | | வயது | |
| மாவட்டம் | | தேதி | 27.08.2021 |

(27.08.2021) இன்று 1963ம் ஆண்டு சட்டம் 44ன் படி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் அரியலூர் திருக்கையில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது செண்டிரிங் வேலை பார்த்து வருகிறேன். ஆறுமுகம், உமாநாத், பிரகாஷ் அகியோர்களை தெரியும். ஆறுமுகம் ஓட்டல் வைத்திருக்கிறார். கடந்த 12.04.2011 அன்று இரவு 10.30 மணியளவில் ஆறுமுகமும், உமாநாத்-ம் . ஓட்டலின் பின்புறம் பாத்திரங்களை கழுவி கொண்டியிருந்த போது நான், சிவா, உமாநாத், குபேந்திரன், ஆகியோர்கள் இருந்தார்கள். அப்போது ஓட்டலின் பின்புறம் உள்ள ஆன்நத நகரில் இருந்து அய்யோ, அம்மா என்று அலரல் சத்தம் கேட்டது. அவர்கள் முதலில் ஓடினார்கள். நான் பின்னால் ஓடினேன். நான் போய் பார்த்த போது அங்கு ஒரு நபர் மயங்கி கீழே கிடந்தார். அவருக்கு வலதுபுற தலையில் பலத்த ரத்த காயம் இருந்தது. அங்கிருந்து 2 நபர்கள் கிழக்கு பக்கம் ஓடினார்கள். மேற்கு பக்கம் ஒருவர் ஓடினார். பிரகாஷ், சிவா, குபேந்திரன், உமாநாத் ஆகியோர்கள் கிழக்கு பக்கமாக ஓடியவர்களை பிடிக்க ஓடினார்கள். நானும் பின்னால் ஓடினேன். 2 நபர்களை பிடித்துவிட்டோம். அவர்களை பார்த்தால் அடையாளம் சொல்லமுடியும். ஆஜர் எதிரிகள் தான் அவர்கள். அவர்களை விசாரிக்க 2 பேரும் அவர்களது பெயர் அய்யப்பன் என்று தான் சொன்னார்கள். ஓடிபோன மற்றொரு நபரின் பெயர் அன்பு என்று தெரிந்துகொண்டோம். இறந்தவர் பெயரை விசாரிக்க சரவணன் என்றும், அவர் கூட்டேரிப்பட்டு என்றும் தெரியவந்ததது. சரவணன் இறந்துகிடந்த இடத்தில் மதுபாட்டில்கள், சாப்பிட்ட இலைகள், பெரிய கல்லும், சற்று தள்ளி கட்டை ஒன்று, இருந்தது. அங்கு சில பேரை வைத்து விட்டு நாங்கள் பிடிபட்ட இருவர்களை கெடார் காவல் நிலையத்தில் கொண்டு வந்து ஆஜர்படுத்தினோம். இது சம்மந்தமாக ஆறுமுகம் புகார் கொடுத்தார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

இல்லை.

மறு விசாரணை

இல்லை.